Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 176 | உள்ளூர் - 25.06.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 176 | வெளியூர் - 26.06.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

பில்லி, சூனியம், செய்வினை - யாரை பாதிக்கும்? பரிகாரம்?

டி.என்.பி.எஸ்.சி. குரூப்-1: 26 அரசு பணியிடங்கள்!

எ.வ.வேலு வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை?

த.வெ.க.வில் சி.விஜயபாஸ்கர்?

# வெனிசுலா நிலநடுக்கம்: பிரதமர் மோடி இரங்கல்!



புதுடெல்லி, ஜூன். 25–

வெனிசுலாவில் ஏற்பட்ட இரு சக்தி வாய்ந்த நிலநடுக்கங்களில் சிக்கி 700 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்திற்கு பிரதமர் மோடி வருத்தம் தெரிவித்து கொண்டார். அவர் வெளியிட்ட எக்ஸ் சமூக ஊடக பதிவில், வெனிசுலாவை கடுமையான நிலநடுக்கம் ஏற்படுத்திய பாதிப்பால் ஆழ்ந்த வேதனை அடைந்துள்ளேன். இந்திய மக்கள் சார்பாக, வெனிசுலா அரசு மற்றும் மக்களுக்கு, குறிப்பிடும்படியாக, சொந்தங்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த நிலநடுக்கத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைந்து வருவதற்காக இந்தியா இறைவனிடம் வேண்டி கொள்கிறது. வெனிசுலா நாட்டுக்கு தேவையான சாத்தியப்பட்ட அனைத்து உதவிகளையும் செய்ய இந்தியா தயாராக உள்ளது என தெரிவித்து உள்ளார்.





## மாணவர்களுக்கு கலர்ஃபுல் சர்ப்ரைஸ்!

சென்னை, ஜூன். 25–

அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் படித்துக் கொண்டிருக்கும் மாணவ, மாணவிகளுக்கு வழங்கும் இலவச சைக்கிள் டிசைனை மாற்ற தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, புதிய வடிவமைப்பில், பல வண்ணங்களில் வழங்கவும், நடப்பு ஆண்டிலேயே அந்த புதிய சைக்கிள்களை வழங்கவும் அரசு தீவிர ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.







தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத் துறை சார்பில் 127 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் 300 புதிய பேருந்துகளின் சேவையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன். தலைமைச் செயலாளர் மு. சாய்குமார், போக்குவரத்துத் துறை செயலாளர் மா. வள்ளலார், போக்குவரத்துத் துறை சிறப்புச் செயலாளர் ஆர். லில்லி. சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் த. மோகன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர். அதனை தொடர்ந்து முதலமைச்சர் ஜோசப் விஜய் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 29A வழித்தட புதிய பேருந்தில் பயணம் செய்தார்.

## வெனிசுலா பூகம்பம்: நிலைகுலைந்த நகரங்கள்!



காரகாஸ், ஜூன். 25–

வெனிசுலாவில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரு சக்தி வாய்ந்த நிலநடுக்க ங்களால் லட்சக்கணக்கானோர் பலியாகி இருக்கலாம் என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

வெனிசுலாவில் அடுத்தடுத்து இரு சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டு மக்களை உலுக்கி போட்டுள்ளன. இதில் முதலில் ரிக்டர் அளவுகோலில் 7.1 அளவிலான நிலநடுக்கமும், பின்னர் 7.5 அளவிலான நிலநடுக்கமும் ஏற்பட்டன. முதலில் மொரோன் நகரில் இருந்து மேற்கு பகுதியிலும், காரகாஸ் நகரில் இருந்து 168 கி.மீ. தொலைவிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

**2–வது நிலநடுக்கம்**

2–வது நிலநடுக்கம் மொரோன் நகரில் இருந்து 16 கி.மீ. தொலைவில் ஏற்பட்டது. இதுபற்றி அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் வெளியிட்ட செய்தியில், தலைநகர் காரகாஸ் நகரில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டதில், பல்வேறு பகுதிகளில் இருந்த கட்டிடங்கள் குலுங்கின. ஒரு நூற்றாண்டில் இல்லாத அளவுக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டு உள்ளன என தெரிவித்தது.

**அவசர நிலை**

இதனால் பல இடங்களில் சுவர்கள் இடிந்து விழுந்தன. பொதுமக்கள், தங்களுடைய செல்ல பிராணிகளை தூக்கிக்கொண்டு தெருக்களில் தஞ்சமடைந்தனர். இதனால் பரபரப்பாக இயங்கி வந்த உணவு விடுதிகள் மற்றும் பிற வர்த்தக கடைகளில் இருந்தவர்கள் அலறியடித்து ஓடினர். சாலை முழுவதும் புழுதி பறந்தது. வீடுகள், கட்டிடங்கள் குலுங்கின. பலர் காயமடைந்தனர். இதனால், அவசரநிலை அறிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், அந்நாட்டு உள்துறை மந்திரி கேபெல்லோ கூறும்போது, பல்வேறு மாகாணங்களிலும் நிலநடுக்கங்களின் தாக்கம் உணரப்பட்டன. மக்களில் பலர் காயமடைந்து உள்ளனர் என கூறினார்.

**ஜனாதிபதி உரை**

வெனிசுலா பொறுப்பு ஜனாதிபதி டெல்சி ரோட்ரிக்ஸ் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது, நிலநடுக்க தாக்கங்களின் பாதிப்புகளை எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம் என்றார். எனினும், நிலநடுக்கம் ஏற்பட்டு 3 மணிநேரம் வரை அவர் மக்களிடம் உரையாற்ற தவறி விட்டார் என்றும், காயமடைந்தவர்கள் பற்றிய தகவல்களை அவருடைய அரசு வெளியிடவில்லை என்றும் அரசியல்வாதிகள் மற்றும் நாட்டு மக்கள் விமர்சித்து வருகின்றனர்.

**லட்சக்கணக்கானோர் பலி**

இந்த இரு நிலநடுக்கங்களும் முறையே 22 கி.மீ. மற்றும் 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தன. இதுபோன்று பூமியின் மேற்பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கங்களால், அவற்றின் தாக்கம் அதிக அளவில் பரவி இருக்கும்.

இதனால், 1,000 முதல் 10,000 பேர் பலியாகி இருக்க கூடும் என அஞ்சப்படுகிறது. எனினும், இந்த எண்ணிக்கை இன்னும் உயரக்கூடும் என்றும் அதிர்ச்சி தகவல் தெரிவிக்கின்றது. லட்சக்கணக்கானோர் பலியாகி இருக்கலாம் என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

# ‘ஷாக்’ அழிக்கும் மின்வாரிய ‘வெள்ளை அறிக்கை’ மின்கட்டண உயர்வு இல்லை!

## மின்துறைக்கு ₹2.47 லட்சம் கோடி கடன்!!




சென்னை, ஜூன். 25–

மின் வாரியத்தின் நிதி, செலவினங்கள் குறித்த வெள்ளை அறிக்கையை மின்வாரிய தலைமையகத்தில் அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார் வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு, கடந்த 16–ந் தேதி, தமிழ்நாட்டின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. நிதி அமைச்சர் மரிய வில்சன் வெளியிட்ட இந்த வெள்ளை அறிக்கையில், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த கடன் ரூ.13 லட்சத்து 18 ஆயிரம் கோடி என்று கூறப்பட்டு இருக்கிறது.

குறிப்பாக, மின் துறையின் மொத்த நிலுவைக் கடன் மட்டும் ரூ.2 லட்சத்து 47 ஆயிரத்து 130 கோடி என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. இது பொதுத்துறை நிறுவனங்களின் ஒட்டுமொத்த கடனான ரூ.3 லட்சத்து 18 ஆயிரத்து 176 கோடியை வைத்து கணக்கிடும்போது, மின் துறையின் கடன் அளவு 77.6 சதவீதம் ஆகும்.

**வெள்ளை அறிக்கை**

இந்த நிலையில், மின் துறைக்கு என தனியாக வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்று அத்துறையின் அமைச்சர் நிர்மல் குமார் கூறியிருந்தார். அதன்படி, மின்துறை தொடர்பான வெள்ளை அறிக்கையை அவர் வெளியிட்டார்.

மின்சார வாரியத்தின் நிதிநிலை குறித்து, வெள்ளை அறிக்கையை வெளியிட்ட அமைச்சர் நிர்மல்குமார், கடந்த 25 ஆண்டுகளாக மின்வாரியம் கடந்து வந்த பாதை குறித்து விரிவான விளக்கம் அளித்து வருகிறார்.

**மின்வாரிய பற்றாக்குறை**

இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் நிர்மல் குமார் பேசியதாவது:–

மின்சார வாரியத்திற்கு தற்போது ரூ.2,47,130 கோடி கடன் உள்ளது.

2021 – 2026 வரை மின்வாரிய செலவு – ரூ.5.32 லட்சம் கோடி

2021 – 2026 வரை மின்வாரிய வருமானம் – ரூ.4.97 லட்சம் கோடி

2021 – 2026 வரை மின்வாரிய பற்றாக்குறை – ரூ.34,447 கோடி.

2001ஆம் ஆண்டு முதலான மின்வாரியத்தின் செயல்பாடுகள் வெள்ளை அறிக்கையில் உள்ளன. மின்சாரத் துறையை மீட்டெடுக்க வேண்டும். அதை வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்ல வேண்டும். 2001 முதல் 2006 வரை ரூ.59ஆயிரம் கோடி வருவாய், ரூ. 67 ஆயிரம் கோடி செலவு ஏற்பட்டுள்ளது.

**செலவினங்கள் அதிகரிப்பு**

கட்டணம் உயர்த்தப்படும் போது அதே அளவுக்கு செலவினங்களும் உயர்த்தப்படுகிறது. செலவினங்கள் அதிகரிக்கிறது தவிர கட்டமைப்புகள் பலப்படுத்தப்படவில்லை. புதிய பணியாளர் தேர்வு மேற்கொள்ளப்படவில்லை மின் வாரியத்தில் குறுகிய கால கான்ட்ராக்ட் மூலம் அதிக விலைக்கு மின்சாரம் வாங்கப்படுகிறது. அதை நீண்ட கால கான்ட்ராக்டாக மாற்றுவதன் மூலம் விலையை குறைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் மாதம் 215 கோடி ரூபாய் சேமிக்கப்படும்.

தமிழ்நாட்டிற்கு ஒரு யூனிட் மின்சாரத்தை ரூபாய் 21 ரூபாய் கொடுத்து வாங்கியுள்ளனர். தமிழ்நாட்டிற்கு அதிகபட்சமாக 21,300 மெகா வாட் மின்சாரம் தேவைப்படுகிறது.

இதற்கிடையே புதிய பணியிடங்கள், திட்டங்களும் இல்லை. மின்சார துறைக்கு மட்டும் கடன் 2.47 லட்சம் கோடியாக உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 87,399 கோடி ரூபாய் மின்வாரியத்தில் கடன் வாங்கப்பட்டுள்ளது. தமிழகம் மின் வாரியத்திற்கு 1.40 லட்சம் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

**பாதிக்கப்பட்ட கேங்மேன்கள் :**

2021ல் மின் வாரியத்துக்கு கேங்மேன் பணிக்காக 5391 பேரை பணிக்கு எடுத்தார்கள். வேலை என்றாலே அதை சும்மா கொடுக்க மாட்டார்கள் என உங்களுக்கே தெரியும் அவர்களிடம் என்ன வாங்கினார்களோ வேலை தருவதாக அவர்களுக்கு ஆர்டர் கொடுத்தாகிவிட்டது. ஆனால் அடுத்து வந்த ஆட்சியில் நீ பணம் வாங்கிவிட்டாய் என்ற சச்சரவில் அவர்களை அப்படியே விட்டுவிட்டார்கள். அவர்கள் பார்க்காத அமைச்சர் இல்லை. இத்தனை காலமாக தங்களுக்கு வேலை இருக்கிறதா இல்லையா என்றே தெரியாமல் அவர்கள் தவிக்கிறார்கள். அவர்களையும் பணியில் அமர்த்த தற்போது ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது

**65,921 காலிப் பணியிடங்கள்;**

மின்சார வாரியத்தின் ஊழியர் பற்றாக்குறை 65,921 ஆக உள்ளது

**“புதிதாக எதுவும் செய்யவில்லை” –**

டி.என்.இ.பி –யில் புதிதாக எதுவும் செய்யவில்லை, ஆனால் ரூ.51,000 கோடி செலவுகள் அதிகமாகியுள்ளது. மின்சாரத்துறையில் புதிதாக டிரான்ஸ்பார்மர்கள் வாங்கவில்லை, முந்தைய ஆண்டுகளில் செய்ததை தான் செய்துள்ளனர்

**25 ஆண்டுகளாக மின்சார வாரியம் :**

மின்சார வாரியத்தின் நிதிநிலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியீடு. 25 ஆண்டுகளாக மின்சார வாரியம் கடந்து வந்த பாதை குறித்து விளக்கம் அளித்துள்ளது.

2021 – 2026 வரை மின்வாரிய செலவு – ரூ.5.32 லட்சம் கோடி 2021 – 2026 வரை மின்வாரிய வருமானம் – ரூ.4.97 லட்சம் கோடி 2021 – 2026 வரை மின்வாரிய பற்றாக்குறை – ரூ.34,447 கோடி “கட்டணம் உயர்த்தப்படும் போது அதே அளவுக்கு செலவினங்களும் உயர்த்தப்படுகிறது. செலவினங்கள் அதிகரிக்கிறது தவிர கட்டமைப்புகள் பலப்படுத்தப்படவில்லை. புதிய பணியாளர் தேர்வு மேற்கொள்ளப்படவில்லை

**மாதம் ரூ.215 கோடி ;**

மின் வாரியத்தில் குறுகிய கால கான்ட்ராக்ட் மூலம் அதிக விலைக்கு மின்சாரம் வாங்கப்படுகிறது. அதை நீண்ட கால கான்ட்ராக்டாக மாற்றுவதன் மூலம் விலையை குறைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் மாதம் 215 கோடி ரூபாய் சேமிக்கப்படும்!

இந்த ஆண்டு மின்கட்டண உயர்வு இல்லை.மின் கட்டண உயர்வால் அனைவரும் பாதிக்கப்படுவர் என்பதால் இந்த ஆண்டு உயர்த்தப்படாது. என அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 25.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 11-ம் தேதி

# E20 பெட்ரோல்: அந்நிய செலாவணி சேமிப்பு!




ஈரான் போர் தீவிரமடைந்து ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் 3 மாதங்களுக்கும் மேலாக வளைகுடா நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு கச்சா எண்ணெய் வரத்து நின்று போனது. இதனால் இந்தியா மற்ற நாடுகளிடம் இருந்து கச்சா எண்ணெயை அதிக விலை கொடுத்து வாங்கியது. இந்த கூடுதல் விலை நுகர்வோரான நம் மீது பெட்ரோல், டீசல் விலை உயர்வின் மூலம் சுமத்தப்பட்டது. கச்சா எண்ணெய்க்கு வெளிநாடுகளை சார்ந்திருப்பதே இந்த நிலைக்கு காரணம் என்பதால் மாற்று எரிபொருள் பயன்பாட்டை அரசு ஊக்குவிக்கிறது.

அந்த வகையில் இந்தியாவில் எத்தனால் கலக்கப்பட்ட பெட்ரோல் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. இது வழக்கமான பெட்ரோலை விட விலை குறைவு, மேலும் எத்தனால் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகிறது.

இந்நிலையில் E20 பெட்ரோலை (20% எத்தனால் கலந்த பெட்ரோல்) வாகனங்களில் பயன்படுத்துவதால் வாகனங்களுக்கான காப்பீடு செல்லாது என சமூக வலைதளங்களில் ஒரு தகவல் பரவி வாகன ஓட்டிகளை குழப்பமடைய வைத்தது.

ஆனால் இது முற்றிலும் தவறான தகவல் என மத்திய அரசு விளக்கம் தந்துள்ளது. பெட்ரோலில் எத்தனால் கலப்பு என்பது அமெரிக்கா, பிரேசில் மற்றும் ஜப்பான் போன்ற பல நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறையில் உள்ள, உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையாகும். எனவே, இதனால் காப்பீடு பாதிக்கப்படாது என தெரிவித்துள்ளது.

பெட்ரோலில் கரும்புச் சாற்றை நேரடியாகக் கலக்கிறார்கள் என சமூக வலைதளங்களில் தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இது உண்மைக்குப் புறம்பானது. கரும்புச் சாறு, மோலாசஸ், மக்காச்சோளம் போன்ற மூலப்பொருட்களில் இருந்து தொழிற்சாலைகளில் பல்வேறு வேதியியல் செயல்முறைகள் மூலமே எத்தனால் தயாரிக்கப்படுகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் எத்தனால் தரப் பரிசோதனைக்குப் பிறகே பெட்ரோலில் கலக்கப்படுகிறது என அரசு கூறுகிறது. வாகனங்களில் எத்தனால் கலந்த பெட்ரோலை ஊற்றினால் எறும்புகள் மொய்க்கும் என்று ஒரு வைரல் வீடியோ பரவி வருகிறது இதுவும் உண்மை அல்ல என பெட்ரோலிய அமைச்சகம் கூறியுள்ளது.

எரிபொருள் தரம் கொண்ட எத்தனாலில் சர்க்கரைச் சத்துக்கள் இருக்காது. மேலும், இதில் சேர்க்கப்படும் 'டிநேச்சுரண்ட்ஸ்' பூச்சிகளை விரட்டும் தன்மையுடையவை. எனவே, எத்தனால் கலந்த பெட்ரோலுக்கும் எறும்புகள் வருவதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என விளக்கம் தந்துள்ளது.

மேலும் E20 பெட்ரோல் பயன்பாட்டால் வாகனத்தின் என்ஜின் பழுதடையும் என பரப்பப்படும் தகவல்களிலும் உண்மையில்லை, பெட்ரோலிய அமைச்சகம், எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் வாகனத் தயாரிப்பு நிறுவனங்கள் இணைந்து இதைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றன என கூறுகிறது. E20 அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, எத்தனால் கலப்பால் என்ஜின் பழுதடைந்ததாகப் பெரிய அளவிலான புகார்கள் எதுவும் வரவில்லை. எரிபொருள் தொட்டிக்குள் தண்ணீர் புகுவதுதான் வாகனத்திற்கு ஆபத்தானதே தவிர, எத்தனால் கலப்பு அல்ல என அரசு தெளிவுபடுத்தியுள்ளது. ஆனால் , எத்தனால் கலப்புத் திட்டத்தின் மூலம், இந்தியா தனது கச்சா எண்ணெய் இறக்குமதியைக் குறைத்து, சுமார் ரூ.1.4 லட்சம் கோடிக்கும் அதிகமான அந்நிய செலாவணியைச் சேமித்துள்ளது. இது விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்கும், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பிற்கும் பெரிதும் உதவுகிறது.

# வெனிசுலாவில் நிலநடுக்கம்- உதவிக்கரம் நீட்டுமா அமெரிக்கா?





வெனிசுலா, ஜூன். 26–

கரீபியன் கடலில் அமைந்துள்ள தென் அமெரிக்க தீவு நாடு வெனிசுலா. இங்கு 40 நொடிகள் இடைவெளியில் 7.2 மற்றும் 7.5 என்ற ரிக்டர் அளவில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

நிலநடுக்கம் காரணமாக அந்நாட்டில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை 10,000க்கும் அதிகமானோர் உயிரிழந்ததாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. உயிரிழப்பு எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என அமெரிக்க புவியியல் ஆய்வு மையமும் அச்சம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வெனிசுலாவில் நாடு முழுவதும் பேரிடர்கால அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இதுகுறித்து அமெரிக்கா ஜனாதிபதி டிரம்ப் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுட்டுள்ளார். அவர் கூறியதாவது,

வெனிசுலாவை தாக்கிய இரண்டு மாபெரும் நிலநடுக்கங்களும் பெரிய அளவில் மக்களை பாதித்துள்ளது. மேலும் அதிக அளவில் உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்கா உதவத் தயாராகவும், விருப்பத்துடனும், திறனுடனும் இருக்கிறது. நமது அரசாங்கத்தின் அனைத்து முகமைகளும் விரைவாகச் செயல்படத் தயாராக இருக்குமாறு நான் அறிவுறுத்தியுள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

# சோதனை காலம் முடிந்தது; வசந்தகாலம் வரப்போகிறது! - வைகோ!



சென்னை, ஜூன். 25–

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம், ம.தி.மு.க.,நகர செயலாளர் ஆதித்யா–ரமா திருமண வரவேற்பில், அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:– நமது கட்சிக்கான சோதனையான காலம் முடிந்து விட்டது. எங்களுக்கு வெற்றி கிடைக்காமல் இருக்கலாம். ஆனால் முல்லை பெரியாறு, ஸ்டெர்லைட் ஆலை, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தை தனியாருக்கு விற்பனை செய்வதை தடுத்தது போன்ற அடிப்படையான பிரச்சினைகளுக்கு தொடர்ந்து போராடி வருகிறோம். மேகதாது அணை பிரச்சினைக்காக முதலில் போராடியது நாம் தான். ஸ்டெர்லைட் ஆலை விவகாரத்தில் பல கட்சிகளை ஆலை நிர்வாகம் வளைத்தது. என்னை மட்டுமே நெருங்க முடியவில்லை. மோடி பிரதமராக பொறுப்பேற்கும் நிகழ்ச்சிக்கு, இலங்கை முன்னாள் அதிபர் ராஜபக்சே வந்ததால் அந்த கூட்டணியில் இருந்து விலகினோம்.

நமது கட்சிக்கான சோதனையான காலம் முடிந்து விட்டது. பனிகாலம் முடிந்து வசந்தகாலம் வரப்போகிறது –9 ஆண்டு கூட்டணியில் அங்கீகாரம் இல்லை. தொண்டர்களின் காயங்களுக்கு மருந்திடுவோம். தன்மானத்தையும், சுயமரியாதையையும் காப்பாற்ற பொதுக்குழுவில் நல்ல முடிவு எடுக்க உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னையில் 17 காவல் ஆய்வாளர்களை இடமாற்றம்!



சென்னை, ஜூன். 25–

சென்னையில் 17 காவல் ஆய்வாளர்களை இடமாற்றம் செய்து சென்னை மாநகர காவல் ஆணையர் அமல்ராஜ் உத்தரவிட்டுள்ளார். சென்னை வேப்பேரி காவல் ஆய்வாளராக தேவி நியமனம் செய்யப்பட்டுள்ளார். புது வண்ணாரப்பேட்டை காவல் ஆய்வாளராக பொன் சித்ரா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# ஹார்முஸ் ஜலசந்தியை பாதுகாப்பாக கடந்த 30 இந்திய கப்பல்கள்!



ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து சீரடை ந்து வருகிறது. 30 இந்திய கப்பல்கள் பாதுகாப்பாக கடந்து சென்றதாக தகவல் வெளியாகி உள்ளது.

# 32 துறைகளில் உதயநிதி, சபரீசனுக்கு சரிபாதி வசூல்; ஆதவ் குற்றச்சாட்டு!



சென்னை, ஜூன். 25–

திமுக ஆட்சியில் 32 துறைகளில் தலா 16 துறைகள் என உதயநிதிக்கும், மாப்பிள்ளை சபரீசனுக்கும் பிரித்துக் கொண்டு வசூலித்து, மொத்த அமைச்சர்களும் கொண்டு போய் கொடுத்ததாக அமைச்சர் ஆதவ் குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது; இதுவரைக்கும் ஒரு ஆளுங்கட்சியின் முதல்வர் மட்டுமே பேசுவதை ஊடகங்களுக்கு கட் பண்ணி போடுவார்கள். எதிர்க்கட்சிகள் பேசுவதை எப்போதுமே வெளியிட மாட்டார்கள். அந்த பாதுகாப்பு அச்சம் எப்போதுமே ஆளுங்கட்சிக்கு இருக்கும். எதிர்க்கட்சிகள் பேசுவதையும் வெளிக் கொண்டு வர வேண்டும். வெளிப்படைத்தன்மை அரசுக்கு இருக்க வேண்டும்.

**வெளிப்படை அரசியல்**

சட்டசபையில் ஒவ்வொரு நாளும் மக்களுக்கான பிரச்னைகள் குறித்து எதிர்க்கட்சி தலைவர்கள் எழுப்பும் போது, ஆளுங்கட்சியினர் எப்படி பதிலளிக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும். எதிர்க்கட்சிகளை நாங்கள் எதிரி கட்சிகளாக பார்க்கவில்லை. கவர்னர் உரை குறித்து அனைத்து கட்சி தலைவர்களும் பேசுவார்கள். திமுக எம்எல்ஏக்கள், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதியையும் மீறி கேலிகள், ஒருமையில் பேசும் பேச்சுக்களை பார்த்திருப்பீர்கள். முதல்வர் ஒவ்வொரு நாளும் 5 மணிநேரம் பொறுமையாக அமர்ந்து குறிப்புகளை எடுக்கிறார்.

முதல்வர் பேசவில்லை, பேசவில்லை என்று அவருக்கு எதிராக தோற்றத்தை திமுகவினர் உருவாக்குகின்றனர்.அனைத்து கட்சி உறுப்பினர்களும் பேசிய பிறகே, முதல்வர் பதிலளித்து பேசுவது மரபு. இதுவரை எந்த முதல்வருக்கும் இல்லாத தைரியம் முதல்வர் விஜய்க்கு இருக்கிறது. அரசு வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும் என்பதற்காக சட்டசபை நிகழ்வுகளை நேரலை செய்து வருகிறார்.

**துணிச்சல் இல்லை**

4 நாட்களாக சட்டசபையில் நடந்த நிகழ்வுகளை விசிக தலைவர் திருமாவளவன் பார்க்க வேண்டும். கொளத்தூர் என்று சட்டசபையில் சொல்லக்கூடாதா? முதல்வர் கட்சி நிதி என்று தான் சொன்னார். அனைத்து கட்சிகளும் இருக்கையில், திமுக மட்டும் ஏன் எழுந்தார்கள். அவங்களுக்கு தெரியும், அனைத்து துறைகளிலும் கட்சி நிதி இருக்கிறது.

துறை ரீதியாக ஊழலுக்கு என்று திட்டம் தீட்டியுள்ளார்கள். திமுக ஆட்சியில் பள்ளிக்கல்வித்துறையில் தனியார் பள்ளி உரிமத்தை புதுப்பிக்க ஒவ்வொரு பள்ளியிடம் இருந்து ரூ.25 லட்சம் நிதி வாங்கியிருக்கிறார்கள். இது பொதுமக்களுக்கு தெரியும்.

முதல்வரின் உரைக்குப் பிறகு வேறு யாரும் பேச முடியாது. ஆனால், சபாநாயகர் எதிர்க்கட்சி தலைவர் பேசுவதற்கு அவகாசம் தருகிறேன் என்கிறார். கட்சி நிதி, குடும்ப நிதி என்றாலே திமுக தான் என்று அனைவருக்கும் தெரியும். இதை பேசுவதற்கு உதயநிதிக்கு நேர்மையும், துணிச்சலும் இல்லை. வெளிநடப்பு செய்த உதயநிதி செய்தியாளர்களிடம் பேசியதை, சட்டசபையில் பேசியிருக்கலாமே?

**சரிபாதி வசூல்**

அவருக்கு (உதயநிதி) தெரியும். 32 துறைகளில் தலா 16 துறைகள் என உதயநிதிக்கும், மாப்பிள்ளை சபரீசனுக்கும் பிரித்துக் கொண்டு வசூலித்து, மொத்த அமைச்சர்களும் கொண்டு போய் கொடுத்தார்கள். முதல்வரின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து விமர்சித்தார்கள். அதனால் தான் தோல்வியடைந்தனர். திமுக எங்களின் அரசியல் எதிரி. மக்களுக்கான அரசியலை செய்து வருகிறோம். கூட்டணி கட்சிகளிடம் விளக்கிக் கொண்டு இருக்கிறோம்.

**ஸ்டாலின் தூண்டுதல்**

முன்னாள் எம்எல்ஏ பனையூர் பாபுவை அழைத்துச் சென்று ஸ்டாலின் 2 மணிநேரம் நிகழ்ச்சி நடத்துகிறார். முன்னாள் எம்எல்ஏவை வைத்து இதுவரைக்கும் திமுக 2 மணிநேர நிகழ்ச்சியை நடத்தியுள்ளதா?, அப்படியென்றால், விசிகவை உடைத்து விடுவோம் என்று எச்சரிக்கிறார்கள். ஆளுர் ஷா நவாஸை தங்களது கட்சிக்கு வருமாறு ஸ்டாலின் நேரடியாக பேசி வருகிறார். இதுதான் பண்ணையார்தனம். ஸ்டாலினின் தூண்டுதலின் பேரில் தான் ஆ.ராசா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் அவதூறு பேசுகின்றனர். ஸ்டாலின் நடிப்பு அரசியலை செய்கிறார், இவ்வாறு அவர் கூறினார்.

# பாஸ்போர்ட் குடியுரிமைக்கான ஆதாரம் அல்ல - மத்திய அரசு!



புதுடெல்லி, ஜூன். 25–

பாஸ்போர்ட், குடியுரிமையை நிரூபிக்கும் ஆவணம் அல்ல என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. 14வது பாஸ்போர்ட் சேவை தினம் கொண்டாடப்பட்ட நிலையில் வெளியுறவு அமைச்சகம் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட அறிக்கையில், "பாஸ்போர்ட்கள் சர்வதேசப் பயணத்திற்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் பயண ஆவணங்கள்.

இதன் பொருள், பாஸ்போர்ட்டை வைத்திருப்பது மட்டுமே குடியுரிமையை வரையறுத்துவிடாது என்பதாகும்.

இந்திய பாஸ்போர்ட்கள் இந்தியர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டாலும் கூட அது இந்திய குடியுரிமையை உறுதி செய்யும் ஆதாரம் அல்ல" என தெரிவித்துள்ளது.

முன்னதாக ஆதார் அட்டையும் குடியுரிமைக்கான ஆதாரம் அல்ல என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தியர்களுக்கு மட்டுமே இந்திய பாஸ்போர்ட் வழங்கப்படும்போதும் அதுவும் குடியுரிமைக்கான ஆதாரம் அல்ல என அறிவிக்கப்பட்டுள்ளது முரண்பாடாக அமைந்துள்ளது. இதனால் குடியுரிமைக்கு எதுதான் ஆதாரம் என்ற குழப்பம் பலரிடையே எழுந்துள்ளது.

# சிவகாசி அருகே செயல்படாத பட்டாசு ஆலையில் வெடி விபத்து!



விருதுநகர், ஜூன். 25–

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே செங்கமலப்பட்டியில் உள்ள பிரில்லியன்ட் பட்டாசு ஆலையில் இன்று வெடி விபத்து ஏற்பட்டது. பல ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த இந்த ஆலையின் வளாகத்திற்குள் சென்ற சிலர் புகைபிடித்தபோது, அவர்கள் வீசிய தீப்பொறி கழிவுப் பட்டாசுகளில் பற்றியதால் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த விபத்தில் ஹரி பாரத், சுபாஷ் மற்றும் மாரிச் செல்வம் ஆகிய 3 பேர் காயமடைந்தனர். அவர்களை அப்பகுதியினர் மீட்டு சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

சம்பவம் குறித்து தகவலறிந்த போலீசார் மற்றும் தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வெடிவிபத்துக்கான காரணம் குறித்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.



# பில்லி, சூனியம், செய்வினை கோளாறுகள் - யாரை பாதிக்கும்? பரிகாரம் என்ன?




பில்லி, சூனியம், செய்வினை என்பது பிறருக்கு தீங்கு விளைவிக்க செய்யப்படும் தீய செயல்கள் என நம்பப்படுகிறது.

திடீர் உடல்நலக்குறைவு, தொழில் நஷ்டம், குடும்ப பிரச்சினைகள், மனஅமைதியின்மை போன்றவை இதன் பாதிப்புகளாக கருதப்படுகின்றன.

ஜோதிடக் கருத்துப்படி லக்னாதிபதி, 1, 5, 9–ஆம் பாவ அதிபதிகள் பலவீனமாக இருந்தால் பாதிப்பு அதிகம் ஏற்படும் என கூறப்படுகிறது.

சூரியன், சந்திரன் பலமாக இருந்தால் தீய சக்திகள் எளிதில் பாதிக்காது என நம்பப்படுகிறது.

**பரிகாரங்கள்:**

திங்கட்கிழமைகளில் சிவன் கோயிலுக்கு சென்று வழிபடுதல்.
குலதெய்வ வழிபாட்டை தவறாமல் செய்தல்.
சரபேஸ்வரர், நரசிம்மர், பிரத்யங்கிரா தேவி வழிபாடு.
21 நாட்கள் தொடர்ந்து சிவாலய தரிசனம்.
எலுமிச்சை, பூசணிக்காய் விளக்கு போன்ற பரிகாரங்களை நம்பிக்கையுடன் செய்தல்.
வீட்டில் கோமியம் தெளித்தல்.
நல்ல எண்ணங்களுடன் வாழ்தல்.

**முக்கிய கருத்து:**

தீமை செய்தால் அது திரும்ப வந்து தாக்கும். இறைநம்பிக்கை, குலதெய்வ வழிபாடு, நல்ல சிந்தனை மற்றும் நற்செயல்கள் தீய சக்திகளிலிருந்து பாதுகாப்பு தரும் என ஆன்மிக நூல்கள் கூறுகின்றன.

# தங்கம் விலை அதிரடி சரிவு!



சென்னை, ஜூன். 25–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,680 குறைந்து ரூ.1,05,120–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.210 குறைந்து ரூ.13,140–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போல வெள்ளி விலையும் குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ஒரு கிராம் ரூ.230–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 10 நாட்களில் மட்டும் தங்கம் விலை சவரனுக்கு ரூ.7 ஆயிரத்து 360–ம் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## சினிமா துளிகள்..!

# திரைப்படங்களிலிருந்து சமந்தா ஓய்வு?



பி.வி. நந்தினி ரெட்டி இயக்கிய "மா இன்டி பங்காரம்" எனும் தெலுங்கு திரைப்படம் சமீபத்தில் வெளியானது.

இத்திரைப்படத்தில் நடிகை சமந்தா நடித்து, பெரும் வரவேற்பையும் பாக்ஸ் ஆபீஸ் வசூலையும் அள்ளினார். இப்படித்தின் பாக்ஸ் ஆபீஸ் வசூல் உலகளவில் ஐந்து நாட்களில் ₹50 கோடியைக் கடந்தது.

இந்நிலையில் படத்தின் வெற்றிக்காக ரசிகர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் நடிகை சமந்தா கலந்துகொண்டார். அப்போது தனது ரசிகர்களுக்கு மேலும் ஒரு மகிழ்ச்சி தரும் விஷியத்தை கூறினார்.

அவர் தனது கர்ப்பத்தை உறுதிப்படுத்தியதோடு, தனது பணிகளை கூடிய விரைவில் முடித்துக்கொண்டு, திரைப்படங்களில் இருந்து ஒரு குறுகிய கால மகப்பேறு விடுப்பு எடுக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

இதனக்கேட்டதும் அங்குள்ள ரசிகர்கள் பெரும் மகிழ்ச்சியில் ஆரவாரத்துடன் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டாடினர்.




# டீ குடிக்கும் போது இந்த 5 உணவுகளை தவிர்க்கவும்!




தேநீர் உடலுக்கு பல நன்மைகளை வழங்கினாலும், சில உணவுகளுடன் சேர்த்து அருந்தும்போது அதன் சத்துக்கள் உடலில் உறிஞ்சப்படுவது குறையலாம். மேலும் செரிமானக் கோளாறுகளும் ஏற்பட வாய்ப்புள்ளது.

**1. இரும்புச்சத்து மற்றும் புரதச்சத்து நிறைந்த உணவுகள்**

பருப்பு, பயறு வகைகள், கீரைகள் போன்றவற்றை சாப்பிடும் நேரத்தில் தேநீர் அருந்தினால், அதிலுள்ள டானின்கள் இரும்புச்சத்து உறிஞ்சப்படுவதைத் தடுக்கலாம். எனவே உணவுக்கு முன் அல்லது பின் 12 மணி நேர இடைவெளி விட்டு தேநீர் குடிப்பது நல்லது.

**2. சிட்ரஸ் பழங்கள்**

ஆரஞ்சு, எலுமிச்சை, சாத்துக்குடி போன்ற பழங்களை தேநீருடன் சேர்த்து சாப்பிடுவது வயிற்றில் அமிலத்தன்மையை அதிகரித்து அஜீரணத்தை ஏற்படுத்தலாம்.

**3. பஜ்ஜி, சமோசா போன்ற எண்ணெய் பலகாரங்கள்**

தேநீருடன் பஜ்ஜி, வடை, சமோசா சாப்பிடுவது பொதுவான பழக்கம். ஆனால் அதிக எண்ணெய் மற்றும் தேநீரில் உள்ள டானின்கள் இணைந்து செரிமானத்தை பாதித்து வயிற்று உப்புசத்தை ஏற்படுத்தலாம்.

**4. பால் மற்றும் தயிர் சார்ந்த உணவுகள்**

தயிர், அதிக கொழுப்பு கொண்ட பால் பொருட்கள் போன்றவற்றை தேநீருடன் சேர்த்து எடுத்துக்கொள்வது, தேநீரின் ஆன்டி–ஆக்ஸிடன்ட் பயன்களை குறைக்கக்கூடும்.

**5. அதிக காரமான மற்றும் அமிலத்தன்மை கொண்ட உணவுகள்**

மிகவும் காரமான உணவுகள் அல்லது அதிக அமிலத்தன்மை கொண்ட உணவுகளை தேநீருடன் சேர்த்து சாப்பிடுவது அஜீரணம், நெஞ்செரிச்சல் மற்றும் வயிற்று அசௌகரியத்தை ஏற்படுத்தலாம்.

**மருத்துவர்களின் அறிவுரை**

தேநீர் குடிக்கும் நேரத்திற்கும் முக்கிய உணவுகளுக்கும் இடையில் குறைந்தபட்சம் ஒரு மணி நேர இடைவெளி இருப்பது நல்லது. இதனால் தேநீரின் சுவையையும், ஆரோக்கிய நன்மைகளையும் முழுமையாக பெற முடியும்.

# அலி கமேனியின் இறுதிச் சடங்கில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு ஈரான் அழைப்பு..!

ஈரான், ஜூன். 25–

ஈரானின் மறைந்த உயரிய தலைவர் அயதுல்லா அலி கமேனியின் இறுதிச் சடங்குகளில் பங்கேற்கப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் அழைப்பு விடுத்துள்ளதாகத் தூதரக வட்டாரங்கள் புதன்கிழமை தெரிவித்தன. இந்த இறுதிச் சடங்குகள் ஜூலை 5 முதல் 9 வரை நடைபெறும். இருப்பினும், பிரதமர் மோடிக்கான அழைப்பு குறித்து இந்தியாவிடம் இருந்து இதுவரை எந்த உறுதிப்படுத்தலும் வரவில்லை. மூன்று தசாப்தங்களாக ஈரானை ஆட்சி செய்த கமேனி, தெஹ்ரான் மீது





அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய பெரும் வான்வழித் தாக்குதல்களின் முதல் நாளான பிப்ரவரி 28 அன்று கொல்லப்பட்டார். இறுதிச் சடங்குகளில் பங்கேற்க இந்தியப் பிரதமருக்கு அதிபர் பெசெஷ்கியன் அழைப்பு விடுத்துள்ளதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இறுதிச் சடங்குகள் ஜூலை 5, 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் தெஹ்ரான் மற்றும் கோம் (Qom) நகரங்களில் நடைபெறவுள்ளன. இறுதி நிகழ்வு ஜூலை 9 அன்று மஷாத் (Mashhad) நகரில் நடைபெறும்.

ஈரானின் அரசியல் அமைப்பை ஏறக்குறைய 40 ஆண்டுகளாக வடிவமைத்த ஒரு தலைவருக்கு அதிகாரப்பூர்வமாக விடை கொடுக்கும் இந்த இறுதிச் சடங்குகளில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பார்கள் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். உண்மையில், இந்த இறுதிச் சடங்குகள் 2026 மார்ச் 4 முதல் 6 வரை தெஹ்ரான் மற்றும் மஷாத் நகரங்களில் நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது, ஆனால் போர் காரணமாக அவை ஒத்திவைக்கப்பட்டன. இறுதிச் சடங்கில் சுமார் 2 கோடி பேர் பங்கேற்கலாம்.

# டிரோன் மூலம் திரைப்படம் எடுக்க பயிற்சி! தமிழ்நாடு அரசு அறிவிப்பு!!

சென்னை, ஜூன். 25–

டிரோன் மூலம் சினிமா காட்சிகள் எடுப்பது எப்படி என்பது உள்ளிட்ட மூன்று நாள் பயிற்சி வகுப்பை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது

இது தொடர்பாக தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தமிழ்நாடு மூன்று நாள் "மீடியா ட்ரோன் பயிற்சி" வகுப்புகள் நடக்க உள்ளது என தெரிவித்துள்ளது. சென்னையில் தொழில் முனைவோருக்கான 'மீடியா ட்ரோன் பயிற்சி' வரும் 06.07. 2026 முதல் 08.07.2026 வரை மூன்று நாட்கள் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பயிற்சி நடைபெற உள்ளது.



**பயிற்சி நோக்கம் / சிறப்பம்சங்கள்:**

ட்ரோன் தொழில்நுட்பம் – அறிமுகம்

ட்ரோன் சினிமாடோகிராஃபி நுட்பங்கள்

வானிலிருந்து (Aerial Photography) புகைப்படம் – அறிமுகம்

FPV சினிமாடோகிராஃபி

DGCA விதிமுறைகள் மற்றும் விமான பாதுகாப்பு

மீடியா ட்ரோன் பைலட்டுகளுக்கான தொழில் வாய்ப்புகள்: திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு. செய்தி மற்றும் ஊடக நிறுவனங்கள்.

ஆவணப்பட தயாரித்தல்.

விளம்பரம் மற்றும் மார்க்கெட்டிங்.

கார்ப்பரேட் திரைப்படங்கள்.

யூடியூப் மற்றும் சமூக ஊடக உள்ளடக்க உருவாக்கம்.

காவல் மற்றும் ராணுவ கண்காணிப்பு.

நிகழ்ச்சி செய்தி களிப்பு.

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை.

ரியல் எஸ்டேட் புகைப்படம் / வீடியோ தயாரித்தல்.

தொழிற்துறை புகைப்படம்.

காடு மற்றும் விலங்கியல் புகைப்படம்.

தீ மற்றும் மீட்பு பணிகள்.

அரசுத் திட்டங்கள்.

மத்திய / மாநில அரசுகள் வழங்கும் நிதியுதவி திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்த விவரங்களும் பயிற்சியின் ஒரு பகுதியாக விளக்கப்படும்.

இப் பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் (ஆண்/பெண் / திருநங்கைகள்/ திருநம்பிகள்/ தொழில்முனைவோர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளலாம். குறைந்தபட்ச கணினி அறிவு வேண்டும், 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் பங்கு பெறும் பயனாளிக்கென குறைந்த வாடகையில் தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்று கொள்ளலாம்.


மேலும், இப்பயிற்சியின் கூடுதல் விவரங்களைப் பெறவும் மற்றும் முன்பதிவு செய்திடவும் www.editn.in என்ற இணையத்தளத்தில் பதிவு செய்து கொள்ளவும். கைபேசி 8668100181 / 99360221280 என்ற எண்களில் தொடர்பு கொள்ளவும். (திங்கள் முதல் வெள்ளி வரை ) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: தமிழ்நாடு ழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், இ.டி.ஐ.ஐ அலுவலக சாலை, சிட்கோ தொழிற் பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி, சென்னை – 600 032. பயிற்சி முடிவில் அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

# த.வெ.க.வில் சி.விஜயபாஸ்கர்?



சென்னை, ஜூன். 25–

சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள இல்லத்தில் தவெக பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஆனந்த் உடன் சி.விஜயபாஸ்கர் சந்தித்து பேசினார். விராலிமலை எம்.எல்.ஏ. பதவியை சி.விஜயபாஸ்கர் அண்மையில் ராஜினாமா செய்திருந்தார். தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியான நிலையில் அமைச்சர் ஆனந்த் உடன் சி.விஜயபாஸ்கர் சந்தித்து பேசினார். ஜூன் 29இல் தனது ஆதரவாளர்க ளுடன் தவெகவில் இணைய முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் திட்டம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.




திருப்பூர் முதலிபாளையம் ஹவுசிங் யூனிட் மெயின் ரோட்டில் பல்சமய நட்புறவுக் கழகத்தின் திருப்பூர் ஒன்றிய கிளை சார்பாக ஒன்றியக் கிளையைச் செயலாளர் சதீஷ்குமார் தலைமையில் மாண்புமிகு தளபதி ஜோசப் விஜய் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தமிழக வெற்றிக் கழகத்தின் தெற்கு ஒன்றிய செயலாளர் அண்ணன் தேவராஜ் அவர்கள் கலந்து கொண்டு இனிப்புகளை வழங்கி வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார். விழாவில் தலைவர் ஷாஜகான் மாவட்ட பொறுப்பாளர் அக்கீம் மாவட்ட இளைஞரணி தலைவர் உசேன் மாவட்ட பொருளாளர் செல்வகுமார் தவெக திருப்பூர் தெற்குஒன்றியதுணை செயலாளர் சிவகுமார் தெற்கு ஒன்றிய துணை செயலாளர் ஒன்றியதலைவர் சந்திரன் திருப்பூர் ஒன்றிய பொருளாளர் சுஜித் ஒன்றிய துணைச் செயலாளர் பழனிச்சாமி திருப்பூர் மாவட்ட மகளிர் அணி தலைவி மேகலா திருப்பூர் மாவட்ட மகளிர் அணி செயலாளர் சித்ரா தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் பழனிச்சாமி ஒன்றிய செயற்குழு உறுப்பினர் ராமகிருஷ்ணன் ஒன்றிய பொதுக்குழு உறுப்பினர் மனோகர் மற்றும் நிர்வாகிகளும் பல்சமய நட்புறவு கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



ஈரோடு, 46 புதூர் ஊராட்சிக்குட்பட்ட நொச்சிக்காட்டு வலசு, இரட்டைக்கிணறு அருள்மிகு சித்தி விநாயகர் கோயில் இரண்டாவது கும்பாபிஷேக விழா பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார் தலைமையில் கோபுர கலசத்திற்கு மகா கும்பாபிஷேகமும், மூலவர், பரிகார தெய்வங்களுக்கு மகா கும்பாபிஷேகம் நடந்தது. இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர். கும்பாபிஷேக விழா நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை விழா கமிட்டியினர் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.



தமிழக முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு தங்க தேர் வடம் பிடித்து இழுத்த மேற்கு மாவட்ட செயலாளர் சங்கர் ஜூன் 25 தமிழக வெற்றி கழகம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஜோசப் விஜய் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு திருப்பூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஜி கே சங்கர் ஏற்பாட்டில் செஞ்சேரிமலை அருள்மிகு மந்தரகிரி வேலாயுத சாமி திருக்கோவிலில் தங்கத்தேர் எடுத்து வழிபாடு செய்யப்பட்டது மேலும் சுல்தான் பேட்டையில் உள்ள ஆசிரமத்தில் 100 நபர்களுக்கு அன்னதானம் உள்ளிட்ட விளையாட்டு பொருட்கள் வழங்கப்பட்டது அதனை தொடர்ந்து செங்கோடம்பாளையம் அங்கன்வாடியில் பேனா பென்சில் இனிப்புகள் வழங்கி கேக் வெட்டியும் ஆபீஸ் டேபிள் டிவி குக்கர் உள்ளிட்ட பொருட்களை மாவட்ட செயலாளர் ஜிகே சங்கர் தலைமையில் வழங்கப்பட்டது. இதில் நிர்வாகிகள் வடக்கு ஒன்றிய ராஜா. செயற்குழு உறுப்பினர் கிருஷ்ணாபுரம் கணேஷ். கொள்கை பரப்பு அணி இணை செயலாளர் அலெக்ஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்....



லிபுலேக் கணவாய்: இந்தியா, நேபாளம் மற்றும் திபெத் ஆகியன சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ள இந்தக் வர்த்தகக் கணவாய், ஏழு ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த நிலையில் மீண்டும் திறக்கப்படவுள்ளது.

# தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!





ஒட்டன்சத்திரம், ஜூன். 25–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் அரசப்பப்பிள்ளைபட்டியில் தமிழக முதல்வர் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ச.ஜோசப் விஜய் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு க.ஜோதிமுத்து தலைமையில் தமிழக வெற்றி கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் ஒன்றிய குழு தலைவர் கே.பி நல்லசாமி,ஒன்றிய செயலாளர் ராஜேஷ் கண்ணன், முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் பழனிவேல் ராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கருப்புசாமி, டாக்டர்.எம்.முத்து, சண்முகவேல், முத்துவேல், மாவட்ட மகளிர் அணி இணை செயலாளர் எம்.கவிதா ராமசாமி, ரகுபதி, , மூர்த்தி, விருப்பாச்சி என்.பி.கே கார்த்திக், வெள்ளைச்சாமி, கொடியேற்றுவதற்கு இடம் தானமாக வழங்கிய ரங்கநாதன், கிளைச் செயலாளர் துரைசாமி, ஒன்றிய துணைச் செயலாளர் பவானி, தலைமை செயற்குழு உறுப்பினர் திவ்யா, பொருளாளர் ராஜா ,மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் திருமலைச்சாமி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வேலை வாய்ப்பு

## டி.என்.பி.எஸ்.சி குரூப்–1 :26 அரசுப் பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC)

அறிவிக்கை எண்: விளம்பர எண் 736 / அறிவிக்கை எண் 05/2026 | தேதி: 23.06.2026

பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்

பணி முறை: நிரந்தரப் பணி

மொத்தக் காலிப்பணியிடங்கள்: 26 (கூட்டு குடிமைப் பணிகள் தேர்வு I / குரூப்–1 பணிகள்)

பணியிடம்: தமிழ்நாடு

விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 30.06.2026

விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 29.07.2026 அன்று இரவு 11:59 மணி வரை

விண்ணப்பிக்கும் முறை: இணையதளம் வழியாக (Online)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://tnpsc.gov.in/

# மதுரை கோட்டத்தில் ரயில்வே கேட்டுகளில் கண்காணிப்பு கேமிரா!

மதுரை, ஜூன் 25–

மதுரை கோட்டத்தில் ரயில்வே கேட்டுகளில் கண்காணிப்பு கேமிரா பாதுகாப்பான ரயில் பயணத்தை உறுதி செய்ய மதுரை கோட்டத்தில் சிக்னல் கட்டுப்பாடு இல்லாத 99 ரயில்வே கேட்களில் கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட்டுள்ளது. ரயில் வருகை பற்றி நிலைய அதிகாரி ரயில்வே கேட் ஊழியரிடம் தெரிவித்துவிட்டார் என்பதை உறுதி செய்ய இருவரும் தங்களுக்கு வழங்கப்பட்ட சிறு புத்தகத்திலிருந்து சங்கேத எண்களை பரிமாறிக் கொள்வது வழக்கம். தற்போது இந்த சங்கேத எண்ணைப் பெற சங்கேத எண்கள் அச்சிடப்பட்ட சிறு புத்தகத்திற்கு பதிலாக ரயில்வே கேட்டுகளில் சிறப்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் மூலம் சங்கேத எண்ணைப் பெற முதலில் ரயில்வே கேட்டை மூட வேண்டும். கேட் மூடினால் தான் சங்கேத எண்ணை இயந்திரம் வெளியிடும். இந்த முயற்சி ரயில்கள் விபத்து இல்லாமல் ரயில்வே கேட்டுகளை கடக்க உதவும். இந்த நடவடிக்கைகளை எல்லாம் கண்காணிப்பு கேமராவும் கண்காணிக்கும். கண்காணிப்பு கேமிரா பதிவுகள் நிலைய 1அதிகாரி மற்றும் மதுரை ரயில் கட்டுப்பாட்டு அலுவலராலும் தொடர்ந்து கண்காணிக்கப்படும். இந்த சிறப்பு ஏற்பாடுகள் மூலம் ரயில் விபத்துக்கள் முழுமையாக தவிர்க்கப்படும். மேலும் ரயில்வே கேட்களை திறக்க சொல்லி ஊழியர்களை நிர்ப்பந்தப்படுத்தி சமூக விரோதிகள் தாக்குவது



போன்ற நிகழ்வுகளில் குற்றவாளிகளை பிடிக்கவும் கண்காணிப்பு கேமிரா வசதி உதவும். இந்த புதிய வசதிகள் திருநெல்வேலி – தென்காசி பிரிவில் 18 இடங்களிலும், மானாமதுரை – விருதுநகர் பிரிவில் 4 இடங்களிலும், விருதுநகர் – செங்கோட்டை – புனலூர் பிரிவில் 18 இடங்களிலும், திருநெல்வேலி – திருச்செந்தூர் பிரிவில் 7 இடங்களிலும், மானாமதுரை – ராமேஸ்வரம் பிரிவில் 18 இடங்களிலும், மானாமதுரை – திருச்சி பிரிவில் 14 இடங்களிலும், மானாமதுரை – மதுரை பிரிவில் 7 இடங்களிலும் திண்டுக்கல் – பொள்ளாச்சி பிரிவில் 12 இடங்களிலும், வாஞ்சி மணியாச்சி – தூத்துக்குடி பிரிவில் ஒரு இடத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இதே பிரிவில் ஒரு இடத்தில் கண்காணிப்பு கேமரா மட்டும் பொருத்தப்பட்டுள்ளது.

## தாம்பரம் - வேளச்சேரி சாலைக்கு 'மேஜர் முகுந்த் வரதராஜன்' பெயர் - முதலமைச்சர் உத்தரவு!




சென்னை, ஜூன். 25–

தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாம்பரம் ரயில் நிலையத்திலிருந்து வேளச்சேரி வரையிலான சாலைக்கு "மேஜர் முகுந்த் வரதராஜன் சாலை" என பெயர் சூட்டப்பட்டுள்ளது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## அயோத்தி ராமர் கோவிலை தகர்க்க சதி..? பகீர் வாக்குமூலம்!

பெங்களூரு, ஜூன். 25–
கர்நாடக மாநிலம் தாவணகெரே மாவட்டம் ஹரிஹரா தாலுகா பண்ணிகோடு கிராமத்தில் கைது செய்யப்பட்ட பயங்கரவாத சந்தேக நபரான சுகைல் (20), அயோத்தியில் உள்ள ராமர் கோவிலில் குண்டுவெடிப்பு நடத்த திட்டமிட்டிருந்ததாக



போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

போலீசார் நடத்திய விசாரணையில் கைதானவர் உத்தரபிரதேச மாநிலம் தசாராம்புரா பகுதியை சேர்ந்த லியாகத் அலி என்பவருடைய மகன் சுகைல், இவர் மீது தேசத்துரோக வழக்கு நிலுவையில் இருப்பதும் தெரியவந்தது. இதனால் போலீசார் தன்னை தேடுவதை அறிந்த சுகைல் உத்தரபிரதேசத்தில் இருந்து தப்பி ஓடி தாவணகெரே வந்து, ஹரிஹரா பண்ணிகோடுவில் உள்ள தொழிற்பேட்டை பகுதியில் இருந்ததும், தன்னை யாரும் அடையாளம் கண்டுபிடித்து விடக்கூடாது என்பதற்காக அவர் ஒரு தொழிற்சாலையில், பெயிண்ட் அடிக்கும் வேலை செய்து வந்ததும் தெரியவந்தது.

கைதான சுகைல் மீது ஹரிஹரா புறநகர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். பின்னர் சுகைல் துமகூரு போலீசில் நேற்று முன்தினம் மாலை ஒப்படைக்கப்பட்டார். அதையடுத்து நேற்று காலை போலீசார், பயங்கரவாதி சுகைலிடம் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.


அப்போது கைதான சுகைல் பகீர் வாக்குமூலம் அளித்துள்ளார். இதுபற்றி போலீஸ் தரப்பில் கூறுகையில், கைதான சுகைல் பாகிஸ்தானின் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்து வந்ததும், இந்தியாவில் பல இடங்களில் தனது கூட் டாளிகளுடன் சேர்ந்து நாசவேலையில் ஈடுபட திட்டமிட்டதும் தெரியவந் துள்ளது. குறிப்பாக அவர், அயோத்தியில் உள்ள ராமர் கோவிலை குண்டு வைத்து தகர்க்க சதி திட்டம் தீட்டி வந்ததும் தெரியவந்தது.

மேலும் சுகைல், பாகிஸ்தான் உள்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த பயங்கரவாதிகளுடன் வாட்ஸ்–அப் மற்றும் இன்ஸ்டாகிராம் மூலம் தொடர்பில் இருந்தது அம்பலமானது. அவரது செல்போனில் பாகிஸ்தான் குறியீடுடன் 'ரானா பாய்' என்ற பெயரில் செல்போன் எண் பதிவு செய்யப்பட்டு இருந்ததை கண்டுபிடித்து உள்ளோம். மேலும், 'மேமோன் மற்றும் ஜுட்டு– 333' போன்ற பயங்கரவாத குழுக்களில் இணைந்து சுகைல் செயல்பட்டதும், பயங்கரவாத குழுக்களுக்கு ஆட்களை சேர்க்க முயற்சி செய்து வந்ததும் தெரியவந்தது.

மேலும் சுகைல் பயங்கரவாதிகளை போல் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை கைகளில் ஏந்தியபடி எடுத்த புகைப்படங்களும் அவரது செல்போனில் இருந்தன. அவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அவரிடம் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகிறது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஜாஜ் நிறுவன முதலீட்டை ஈர்க்க மல்லுக்கட்டும் தமிழ்நாடு, தெலுங்கானா!

சென்னை, ஜூன். 25–
இந்தியாவில் தொழில் முதலீடுகளை ஈர்க்க ஒவ்வொரு மாநிலங்களும் போட்டிபோடுகின்றன. பெரு நிறுவனங்களுக்கு சிவப்பு கம்பளம் விரித்து தேவையான உதவிகளை செய்து வரவேற்கின்றன. அந்த வகையில் முன்னணி இருசக்கர வாகன தயாரிப்பு நிறுவனமான பஜாஜ் நிறுவனம்




தனது புதிய உற்பத்தி ஆலையை அமைப்பதற்காக தென்மாநிலங்களான தமிழ்நாடு மற்றும் தெலுங்கானாவும் மல்லுக்கட்டி வருகின்றன.

பஜாஜ் நிறுவனத்துக்கு மராட்டிய அரசிடம் இருந்து வரவேண்டிய மின்சார வாகனங்களுக்கான மானியத்தொகை (எப்.ஏ.எம்.இ. மற்றும் மாநில மானியங்கள்) ரூ.70 கோடிக்கு மேல் கிடைக்காமல் நிலுவையில் இருக்கிறது. இந்த நிதி சார்ந்த இழுபறி காரணமாக பஜாஜ் நிறுவனம் தனது அடுத்தகட்ட விரிவாக்கத்தை மராட்டியத்துக்கு வெளியே கொண்டு செல்ல தீவிரமாக ஆலோசித்து வருகிறது. அந்த ஆலோசனையின்படி, தமிழ்நாடு, தெலுங்கானா மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

பஜாஜ் நிறுவனத்தின் மின்சார இருசக்கர வாகனங்களான 'சேத்தக்' மாடல்களுக்கான தேவை சந்தையில் வேகமாக அதிகரித்து வருவதால், அதன் உற்பத்தி திறனை விரிவாக்கவும் நிறுவனம் திட்டமிட்டிருப்பது இந்த புதிய பாதைக்கு முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது. அந்தவகையில் தமிழ்நாடு, தெலுங்கானா இரு மாநிலங்களுமே பஜாஜ் நிறுவனத்தின் இந்த பிரமாண்ட முதலீட்டை ஈர்ப்பதற்கு தங்கள் தரப்பு சாதகமான சூழலை முன்வைத்து வருவதாக சொல்லப்படுகிறது.

தமிழ்நாட்டில் சென்னை, ஒசூர், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒரகடம் போன்ற பகுதிகளில் ஏற்கனவே வலுவான ஆட்டோமொபைல் சுற்றுச்சூழல் மற்றும் முதிர்ச்சி அடைந்த 'சப்ளை செயின்' இருப்பதால் போட்டியில் முன்னணியில் இருப்பதாக கூறப்படுகிறது. அதேநேரம், தொழில்நுட்பம் மற்றும் புதிய கொள்கை ஆதரவு மூலம் வளர்ந்துவரும் தெலுங்கானா மாநிலமும், பஜாஜ் நிறுவனத்தை ஈர்க்கத் தேவையான உள்கட்டமைப்பு மற்றும் நில வசதிகளை செய்துதர முன்வந்திருக்கிறது.

இந்த ஆலை அமைக்கப்பட்டால், இது தென்இந்தியாவில் அமைய இருக்கும் பஜாஜ் ஆட்டோ நிறுவனத்தின் முதலாவது உற்பத்தி ஆலையாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது பஜாஜ் நிறுவனம் இரு மாநிலங்களின் சலுகைகளையும், தளங்களையும் ஆய்வு செய்து வருவதாகவும், யார் பக்கம் போகலாம் என்பது குறித்த இறுதி முடிவு விரைவில் எட்டப்பட இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பஜாஜ் ஆட்டோ முதலீடு முந்தைய தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்படாத முதலீடு திட்டம் என்றும், அவ்வாறு தமிழகத்தில் பஜாஜ் நிறுவனம் கால் தடம் பதித்தால், அந்த பெருமை தற்போது ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கும் த.வெ.க. அரசுக்கே சேரும் என்றும் பரவலாக பேசப்படுகிறது.

## இறுதிகட்டத்தில் டெல்லியில் இந்தியா - அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம்!



புதுடெல்லி, ஜூன். 25–
இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் இறுதி கட்டத்தை நெருங்கி உள்ளது என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார். அமெரிக்க பிரதிநிதிகளுடன் டெல்லியில் நடத்திய 2 நாள் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தத் தகவலை அமைச்சர் தெரிவித்தார். இந்தப் பேச்சுவார்த்தையின் அடுத்தகட்டமாக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் இருதரப்பும் மீண்டும் ஆலோசனை நடத்தும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஒரே மேடையில் ஸ்டாலின், சீமான், வைகோ!



சென்னை, ஜூன். 25–
திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாட்டின் மேனாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், திரைப்பட இயக்குநர் வ.கௌதமன் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்பதற்காக புதுச்சேரிக்கு வருகை தந்தார்.

புதுச்சேரி எல்லை கோரிமேடு பகுதியில் உள்ள சங்கமித்ரா கன்வென்ஷன் ஹாலில் ஜூன்24 இல் இரவு இந்தத் திருமண வரவேற்பு விழா நடைபெற்றது.

விழாவில் நேரில் கலந்துகொண்ட தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின், மணமக்கள் கௌ.பரஞ்ஜோதி – க.குணாநிதி ஆகியோரை மலர்ச்செண்டு வழங்கி மனமாரா வாழ்த்தினார். இத்திருமண வரவேற்பு விழாவில் தமிழக அரசியலின் முக்கியத் தலைவர்களான தி.மு.க தலைவர் ஸ்டாலின், ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ மற்றும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோர் ஒரே நேரத்தில் பங்கேற்றனர்.

மேடையில் இந்த 3 தலைவர்களும் அருகருகே அமர்ந்து, சுமுகமாகவும் நெகிழ்ச்சியாகவும் உரையாடி கொண்ட காட்சி அங்கிருந்த அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

## எ.வ.வேலு வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை?



சென்னை, ஜூன். 25–
திமுக முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் 35 பேர் சோதனை நடத்தி வருகின்றனர். சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள எ.வ.வேலு வீடு உள்ளிட்ட 13 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடத்தி வருகிறது. தென்மாத்தூரில் உள்ள கல்வி நிறுவனங்களிலும் சோதனை நடைபெற்று வருகிறது. திண்டுக்கல்லில் எ.வ.வேலுவிற்கு தொடர்புடைய பொறியாளர் வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடத்தி வருகிறது. மீனாட்சிபுரத்தில் உள்ள பொறியாளர் கண்ணன் வீட்டில் சோதனை லஞ்ச ஒழிப்புத்துறை மேற்கொண்டு வருகிறது.

2006–11 ல் அமைச்சராக இருந்தபோது சொத்துக் குவித்ததாக எ.வ.வேலு மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது. இந்த புகாரின் அடிப்படையில், இந்த சோதனை நடந்து வருவதாக கூறப்படுகிறது. இந்த சோதனையில் முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இருப்பினும் சோதனையில் முடிவிலேயே முழு விவரமும் தெரியவரும்.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, முன்னாள் பொறியாளர்கள் உள்ளிட்ட 11 பேர் மீது 8 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## புகழ் வணக்கம்..!

சமூகநீதிக் காவலர்
திரு.வி.பி.சிங் அவர்களின்
பிறந்தநாளில் வாழ்த்துவோம்...!
வணங்குவோம்..!
தன் ஆட்சியையே இழந்தாலும்...!
சமூகநீதிக் கொள்கையை
இழக்காதவர்...!
அவர்களுக்குப் புகழ் வணக்கம்..!





முனைவர் வைகைச்செல்வன்
முன்னாள் அமைச்சர்



தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் ஓடைப்பட்டியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் சமூகநீதி மாணவர் விடுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் V.சம்பத்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்கு தங்கிப்பயிலும் மாணவர்களுடன் அமர்ந்து கலந்துரையாடினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா ஆகியோர் உள்ளனர்.

## மிரட்டலுக்கெல்லாம் அஞ்சிடும் இயக்கம் அல்ல திமுக; ஸ்டாலின்!



சென்னை, ஜூன். 25–
முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுக்கு சொந்தமான இடங்களில் தமிழக அரசின் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தி வரும் நிலையில், ''ஆளும் கட்சியினரின் இந்த மிரட்டலுக்கெல்லாம் அஞ்சிடும் இயக்கம் அல்ல திமுக'' என அக்கட்சி தலைவர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவின் வீட்டில் தமிழக அரசின் லஞ்ச ஒழிப்பு துறை ரெய்டு நடத்தி வருகிறது. அதற்கு அவர் முழு ஒத்துழைப்பை வழங்கி வருகிறார். சட்டப்படி எதிர்கொண்டு, நீதிமன்றத்தில் அவர் தரப்பு நியாயத்தை நிரூபிப்பார்.

அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடன், திமுக ஆட்சிக்காலத்தில் ஊழல் என இதுவரை தொடரப்பட்ட ஒரு வழக்கில் கூட குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடிந்ததில்லை என்பதே வரலாறு. ஆளும்கட்சியினரின் இந்த மிரட்டலுக்கெல்லாம் அஞ்சிடும் இயக்கம் அல்ல திமுக. இதைவிடப் பெரிய அடக்குமுறைகளையே பார்த்தவர்கள் நாங்கள். இதையும் எதிர்கொண்டு வெற்றி பெறுவோம். இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.

## 6 சட்டசபை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்?




சென்னை, ஜூன். 25–
தற்போது தமிழகத்தில் திருச்சி (கிழக்கு), மதுராந்தகம், தாராபுரம், பெருந்துறை, அம்பாசமுத்திரம் மற்றும் விராலிமலை ஆகிய 6 சட்டசபைத் தொகுதிகள் காலியாக உள்ளன. இதுகுறித்த தகவலை சட்டசபைச் செயலகம் தேர்தல் ஆணையத்துக்கு தெரிவித்துள்ளது. பொதுவாக ஒரு தொகுதி காலியானால், 6 மாதங்களுக்குள் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது சட்ட விதியாகும்.

அதன்படி, இன்னும் 5 மாத கால அவகாசம் இருந்தாலும், இந்திய தேர்தல் ஆணையம் விரைவில் தேர்தலை நடத்த முடிவு செய்துள்ளது. இதையடுத்து, தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், இடைத்தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு (கலெக்டர்கள்) சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். அதன்படி, சம்பந்தப்பட்ட தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், வாக்குப்பதிவுக்கு தேவையான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை தயார் செய்யும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. எனவே, விரைவில் தேர்தல் தேதி அறிவிப்பு வெளியாகலாம் என்று டெல்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து டெல்லியில் உள்ள தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் கூறுகையில், ''தமிழகம் மட்டுமின்றி, பிற மாநிலங்களில் காலியாக உள்ள சட்டசபைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக இடைத்தேர்தல் நடத்துவதற்கான பணிகளை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது. தமிழகத்தில் மட்டும் 6 தொகுதிகள் காலியாக உள்ளன. எனவே, விரைவில் தேர்தல் அறிவிப்பு வெளியாகும்'' என்றார்.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020